## *2020ம் ஆண்டு கருபொருள்: குணமளிக்க மகிழ்ச்சியுடன் அனுப்பப்படுதல்*

*அ.தி.ச. பிப்பரவரி மாத சிந்தனை மடல்: அவர்தம் காயங்களால், நீங்கள் குணமடைந்துள்ளீர்கள் (1 பேதுரு 2:24)*

*கவனம்: கடவுளே நம்மை தூதுரைப்பணிக்கு அனுப்புகிறார்*

*நிகழ்வு: உலக நோயாளிகள் தினம்*

---

***அறிமுகம்:***

*2015ம் ஏப்ரல் 12ம் திகதி, ரோம் நகரில் இரக்கத்தின் ஆண்டவர் ஞாயிறன்று ஆற்றிய மறையுரையில் பாப்பரசர் பிரான்சிஸ் இவ்வாறு கூறினார். இயேசுவின் தழும்புகள் கருணை நிறைந்தது. அவற்றைத் தொட்ட திருத்தூதர் தோமாவை பின்பற்றிட நமக்கு ஊக்கமளிக்கின்றது. மேலும் நாம் மனமாற நமது இதயங்களுக்கு அனுமதியும் வழங்குகின்றன.*

"நற்செய்தியின் வாயிலாக ஆண்டவர் தமது காயங்களை காட்டுகின்றார். அவை இரக்கத்தின் காயங்கள். இயேசுவின் காயங்கள் கருணையின் காயங்கள் என்பது உண்மையே என பாப்பரசர் கூறினார். "நமது நம்பிக்கை குறைவிலிருந்து நம்மை குணப்படுத்தும்படி தோமாவைப் போன்று அக்காயங்களைத் தொடும்படிக்கு இதோ ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, அக்காயங்களின் மறையுண்மையான இரக்கம் நிறைந்த அன்பிற்கு அவர் நமக்கு அழைப்புவிடுக்கிறார்" என பாப்பரசர் தொடர்ந்து தம் உரையில் எடுத்துரைத்தார்.

***ஆரம்ப பாடல்:***

*நெஞ்சத்திலே தூய்மையுண்டோ இயேசு வருகின்றார்*
*நொறுங்குண்ட நெஞ்சத்தையே இயேசு அழைக்கின்றார் (2)*

1. *வருந்திச் சுமக்கும் பாவம் நம்மைக் கொடிய இருளில் சேர்க்கும் (2)*
   *செய்த பாவம் இனி போதும் அவர் பாதம் வந்து சேரும்*
   *அவர் பாதம் வந்து சேரும்.*

2. *குருதி சிந்தும் நெஞ்சம் நம்மைக் கூர்ந்து நோக்கும் கண்கள் - 2*
   *அங்கு பாரும் செந்நீர் வெள்ளம் அவர் பாதம் வந்து சேரும் - 2*
   *அவர் பாதம் வந்து சேரும்.*

அ.தி.ச. உறுப்பினர் ஒருவர் **ஆரம்ப செபம்** கூறுவார்.

**உரையாடல்**

ஐக்கிய அமெரிக்கா, ஜோர்ஜியா, அட்லாண்டாவிலுள்ள தனியார் மருத்துவ மனையின் ஆன்மீக இயக்குனராகவும் மருத்துவ மேற்பார்வையாளராகவும் பணிபுரியும் மனவியல் சிகிச்சை நிபுணர் கத்ரின் சி. லெரிசே அவர்களின் கட்டுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கலக்கம், தலைசுற்றல் ஆகியவை வரவிருக்கும் அழிவிற்கு ஒரு உணர்வாக கருதப்படுகிறது. எனக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றது? என் மகளின் 8வது வயது பிறந்த விழாவை எடுத்து நடத்த வேண்டிய நான், மருத்துவ மனையின் அவசரச் சிகிச்சை பிரிவில் உள்ள படுக்கையின் ஓரத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறேன். இதயம் வேகமாக துடிக்கின்றது, சிரம் தாழ்கின்றது, என் முன்னே கரங்கள் இறுக்கப்படுகின்றன. இவை அனைத்தையும் வைத்துக்கொண்டு என்னால் என்ன செய்ய முடியும். எனக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாக எண்ணிக்கொண்டேன் ஆனால் அவர்கள் "பீதி கோளாறு" என அதனை அழைக்கிறார்கள். என்ன? எனக்கு? பீதிகோளாறா? இது நிகழவே கூடாது. நான் ஒரு தாய் மற்றும் ஒரு மனைவியாக இருக்கிறேன். நான் கவனிக்க எனக்கு ஒரு குடும்பம் இருக்கிறது.

அவர்களோ என்னை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். எனது இல்லறக் கடமைகளுக்கு நான் திரும்ப இப்பயங்கர தருணங்களை நான் கடந்துசெல்ல வேண்டுமென மன்றாடினேன். மருத்துவமனை அறைக்குள் வெள்ளை நிறக் கழுத்துப் பட்டையுடன் கறுப்பு நிற உடையணிந்த ஒரு மனிதன் நடந்து வந்தார். அவர் ஒரு குருவானவர். எவ்வித அறிமுகமின்றி படுக்கையில் என் பக்கத்தில் அமர்ந்தார். நித்தியத்தில் இருப்பதுபோன்ற அமைதியில் நாங்கள் ஒன்றாக அமர்ந்திருந்தோம். “நீங்கள் ஒரு குணப்படுத்துபவராக இருக்க விரும்புகிறீர்களா” என வினவி மௌனத்தை கலைத்தார். என்ன? என நான் கேட்டேன். அதற்கு “நீங்கள் ஒரு குணப்படுத்துபவராக இருக்க விரும்புகிறீர்களா, இதுபோன்ற தருணங்களில்தான் குணப்படுத்துகிறவர்கள் பிறக்கிறார்கள்” என மீண்டும் கூறினார். இந்த பாதிரியாரின் வருகையின் நிகழ்வு பதினெட்டு ஆண்டுகளை கடந்துவிட்டது. தாழ்ச்சி நிறைந்த இந்த பங்கு குருவானவர் எவ்வித ஆரவாரமின்றி வெறுமெனவே ஒரு காயப்பட்ட குணமளிப்பவராக தமது வழக்கமான ஆற்றலை வெளிப்படுத்தி பணிபுரிந்து வந்தார். என்னைக் குறித்த எனது பார்வையில் ஒரு முழுமையான மாற்றம் ஏற்பட்டிருந்தது.

மேல் நோக்கியப் பயணம் என எதை நான் கருதிக்கொண்டிருந்தேனோ அது உண்மையிலேயே கீழ்நோக்கியப் பயணமாக அமைந்திருந்தது. ஏற்றப்பாதை, இறக்கப்பாதையாக ஆயிற்று.

மிகவும் திறமையான மருத்துவர் ஒருவர், பலசாலியாக இருப்பதோடு ஆரோக்கியத்திற்கு தகுந்த மாதிரியாக இருக்க வேண்டிய அவர், பலவித நொய்களினால் துன்பப்பட்டு, அந்த வேதனைகளினால் உருமாற்றம் அடைந்துவருகிறார். குணப்படுத்துகிறவர் பற்றிய கண்ணோட்டத்தில் ஏற்பட்ட இத்தகைய மாற்றமே, கார்ல் ஜீங்கின் எழுத்துக்களின் மையமாக விளங்குகிறது. “உளவியலிள் அடிப்படை கேள்விகள்” என்ற தலைப்பின் கீழ் உள்ள அவரது அத்தியாயத்தில் கார்ல் ஜீங் இவ்வாறு விளக்குகிறார். ஒவ்வொரு சிகிச்சையிலும் ஒரு நல்ல பாதி தன்னையே பரிசோதிக்கும் மருத்துவரிடமே ஆழமாக உள்ளடங்கி உள்ளது என்றால் அது மிகையாகாது. மருத்துவர் தன்னிலே எதை மட்டுமே சரிபடுத்த முடியுமோ அவற்றையே தன்னுடைய நோயாளிகளுக்கும் செய்ய முடியும் என்று அவரால் நம்ப முடிகிறது.

காயமடைந்த குணமளிப்பவர் என்பதற்கு இதுவே பொருள். இதைத்தவிர வேறொன்றுமில்லை. காரல் ஜீங்கால் இதற்கு மேலாக தெளிவுபடுத்த முடியவில்லை. மனவியல் நிபுணரின் காயமுற்ற அனுபவமே, துன்புறும் வாடிக்கையாளர்களை கனிவுடன் எதிர்கொள்ள உதவி செய்கிறது. சிகிச்சையாளரின் “மனநலம்” “உயர்ந்தது” என்று ஊகிக்க முடியாது என கார்ல் ஜீங் அறிவுறுத்துகின்றார்.

அமைதியாக அமர்ந்து நோயாளியின் வேதனைகளை கேட்டறிவது என்பது அவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க ஏதாவது “செய்ய வேண்டும்” என்ற தவிப்பை இருதரப்பினருமே கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளச் செய்கிறது.

***சிந்தனை:***
உங்களுக்கு அடுத்திருப்போரிடம் கலந்து பேசவும்.

✧ மேற்கூறப்பட்ட கட்டுரையின் அடிப்படையில் ஒரு கிறிஸ்துவன் என்ற முறையில் சொந்த காயப்பட்ட அனுபவம் எவ்வாறு காயப்பட்ட பிறரை மிகுந்த கனிவுடன் கவனிக்க துணைபுரிகிறது?

✧ ‘அவர்தம் காயங்களினால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்’ என்ற சொற்றொடர் உங்களுக்கு வழங்கும் பொருள் என்ன?



## ஆய்ந்தறிதல்



*எசாயா 53 : 4-7*

4 மெய்யாகவே அவர் நம் பிணிகளை ஏற்றுக் கொண்டார், நம்முடைய நோய்களைச் சுமந்துகொண்டார்; ஆனால் அவர் தண்டனைக்குள்ளானவர் எனவும், கடவுளால் ஒறுக்கப்பட்டவர் எனவும், வாதிக்கப் பட்டவர் எனவும் நாம் எண்ணினோம்.

5 ஆனால் நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார், நம் அக்கிரமங்களுக்காகவே அவர் நொறுக்கப்பட்டார்; நம்மை நலமாக்கும் தண்டனை அவர் மேல் விழுந்தது, அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம்.

6 ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழி தவறி அலைந்தோம், கால் போன வழியே ஒவ்வொருவரும் போனோம்; நம் அனைவருடைய அக்கிரமங்களையும் ஆண்டவர் அவர் மேல் சுமத்தினார்.



7 அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார்; தாழ்மையாய் அதைத் தாங்கிக்கொண்டார்; அவர் வாய்கூடத் திறக்கவில்லை; கொல்வதற்காக இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டிபோலும், மயிர் கத்தரிப்போன் முன்னிலையில் கத்தாத செம்மறியாடு போலும் அவர் வாய் திறக்கவில்லை.

***சிந்தனை:***

- *வாசகத்தை உரத்த குரலில் வாசித்து. திறந்த மனதுடன் செவிமடுக்கவும்.*
- *ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் உங்கள் மனதை தொடும்வரை மௌனமாக தனித்து படியுங்கள்*
- *வார்த்தை அல்லத சொற்றொடர் வாயிலாக பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு என்ன கூறுகிறார்?*
- *ஆண்டவரின் வார்த்தைக்கு பதில் மொழியாக அவருக்கு நீங்கள் என்ன கூறினீர்கள்?*
- *உங்களுக்கு பிடித்த இறைத்திரு வசனம் மற்றும் ஏன் அது உங்களுக்கு மிகுந்த அர்த்தம் உள்ளதாக இருந்தது என்பதை (3-4 நபர்கள்) கொண்ட குழுக்களில் பகிரவும்.*

## செயல்

*நம்முடைய சொந்த காயங்கள் சவால்கள் மற்றும் வேதனைகள் நமக்குள் இருந்தபோதிலும் நம்முடைய குடும்பம், அ.தி.ச., பங்கு மற்றும் கழகத்திலுள்ள பிறருக்கு நம்மால் எவ்வாறு உதவ முடியும் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.*

**முடிவு செபம்**
*அ.தி.ச. குழுவின் மற்றொரு உறுப்பினர்* **முடிவு செபத்தை** *கூறுவார்.*

***முடிவு பாடல்:***

**கருணை தெய்வமே கண்பாரும்**
எங்கள் பாவங்களை நீர் பொறுத்தருளும்

1. உடலும் மனமும் அறிவும் ஒன்றுசேர்ந்து
உம்மை எதிர்த்ததையா (2)
தேவ வாக்கின் வழியை மனம்
பன்முறை அறிந்தும் வெறுத்ததையா
பாவச்சேற்றை வாழ்வில் எம்வாழ்வே கொண்டு நிறைந்ததையா

2. பாதை தெளிவுறத் தெரிந்தும் - அதைப்
பார்த்து நாங்கள் நடக்கவில்லை (2)
உண்மை விளக்கு எரிந்தும் - அதன்
ஒளியின் அருகே வாழவில்லை
இறைவன் அன்பு அழைத்தும் - அதை
உணர்ந்த பின்னும் திருந்தவில்லை